சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணி மீ 28-ம் உ

உ
சிவமயம்

இலங்கைத்தீவு தாபாலகச்
பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும்
வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40

புத் - 93 ] யாழ்ப்பாணம்:- ரௌத்திரி ஞு ஆவணி மீ 29-8-80 வெள்ளிக்கிழமை [ இல 16

# அலைவாயில் ஆறுமுகன் அமர்ந்தருள் செய் ஆலயம்

## திருச்செந்தூரில் நாளை திகழும் கொடி ஏற்றம்

ஆறுபடை வீடுகளில் ஒன்றாய் ஆறுமுகப் பெருமானுக்கடியவர்கள் அகத்தில் என்றும் அமைந்து அருட்காட்சி அளிப்பதாய்ச் சைவப் பேறுடைய பாரதத்தின் தென்பால் அமைந்த திருத்தலங்களிலே மகா சமுத்திர தீர்த்த வளப்புடையது திருச்செந்தூர். இந்த அருமையான நாமத்தைச் சிந்தைசெயவே இதயம் இன்பமடையும். ஆவணித் திங்களில் அச்சுவினி நாளிலே பஞ்சமித் திதியில் அலைவாயில் ஆறுமுகப் பெருமானுக்குக் கொடி ஏற்றம் நிகழும் வைபவம் குவலயத்துக்குரிய செய்தியே.



ஆவணி 22 ஆம் நாளிலே தேரு ... அடுத்த நாள் சமுத்திர தீர்த்தமும் ஆம் பெரிய நிகழ்ச்சிகளிலே பல்லாயிரம் மக்கள் பங்கு கொள்வர். இந்த எழில் மிகு திருச்செந்தூரைப்பற்றி ஓர் புராணம் வென்றிமாலைக்கவிராசர் இயற்றி இருக்கின்றனர். இதற்கு யாழ்ப்பாணத்து நீர்வை ஸ்ரீமத் ச. சிவப்பிரகாச பண்டிதர் அவர்கள் ஒரு அரிய உரை எழுதியுள்ளனர். இதனைச் சைவபரிபாலன சபையார் வெளியிட்டிருக்கின்றனர்.

செய்யுட் சிறப்புக்களாகச் சிலவற்றைக் கீழ்க் காண்க.

தேரிவாந்த சிறப்பு

சிய மெல்லணை நீங்கியே செங்கதி ரனைய
பாயொ ளிச்சுடர்ப் பாதுகை மேற்பதஞ் சேர்த்தி
நாய கன்பெருங் கோபுர வாயிலி னண்ணி
வாயு வுக்கிறை கொணர்ந்ததே ரேறினன் மகிழ்ந்தே. (60)

இ - ள்: நாயகன் சியமெல்லணை நீங்கி- (அங்ஙனம் அக்) கடவுள் சிங்காசனத்தினின்று நீங்கி. செங்கதிரனைய பாயொளிச் சுடர்ப் பாதுகைமேற் பதஞ் சேர்த்தி- சூரியன்போலும் பரந்த ஒளியையுடைய பொற்பாதுகையிற் பாதங்களை வைத்து, பெருங் கோபுர வாயிலின் நண்ணி - பெருமையாகிய கோபுரவாயிலிற் சேர்ந்து, வாயுவுக்கிறை கொணர்ந்த தேர் மகிழ்ந்து ஏறினன்- வாயுதேவன் கொணர்ந்த தேரின் கண்ணே உவந்து இவர்ந்தருளினார் எ - று.

தேரி னேறிய வெல்லையிற் செம்பொனி னடைப்பை
மார னேந்தினன் களாசியை வருணனின் றெடுத்தான்
கோர வீரவாள் கூற்றுவன் றனதுகைக் கொண்டா
னேரு லாவிய சாமர மிந்திர னெடுத்தான்.

இ-ள்: தேரின் ஏறிய எல்லையிற் - (சுவாமி) தேரில் இவர்ந்தருளிய பொழுது, மாரன் செம்பொனின் அடைப்பை ஏந்தினன்- காமன் பொன்னாலாய வெற்றிலைப் பாத்திரத்தைத் தாங்கினான், வருணன் களாசியை எடுத்து நின்றான்- வருணன் படிக்கத்தை எடுத்து நின்றான், கூற்றுவன் கோர வீர வாள் தனது

வளர்ச்சி 2 ஆம் பக்கம்

### செங்கலடி ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் மகாகும்பாபிஷேகம்

மட்டுமாநகரிலே செங்கலடிச் செப்பதியிற் கோயில் கொண்டருளும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானுக்கு நாளை 30-8-80 மகா கும்பாபிஷேகம் மங்களமாக நிகழவிருக்கின்றது.

மட்டுநகர் வியாகரண சிரோமணி சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்களும் சிவஸ்ரீ வரதராசக் குருக்களும் பொன்னாலை சிவஸ்ரீ ச. சுப்பிரமணியக் குருக்களும் பிரதிஷ்டாக் குருமார்களாகப் பணிபுரிகின்றனர்.

### பஞ்சமுகப்பிள்ளையார் எழுந்தருளிப் பிரதிட்டை

மல்லாகம் பழம்பிள்ளையார் கோயிலுக்கு ஒரு எழுந்தருளி பஞ்சமுகங்களுடன் உபயமாக அவ்வூரைத் தாயூராகக் கொண்டவரும், சாந்தி அச்சக உரிமையாளரும் ஆகும் திரு. தி. நாகரத்தினம் அவர்களும் குடும்பத்தினரும் உதவியதைச் சென்ற திங்கட்கிழமை மகாகும்பாபிஷேகம் நடாத்திப் பிரதிட்டை செய்தனர் சுன்னாகம் சிவபூதராயர் கோயிற் பிரதமகுரு பிரம்மஸ்ரீ மு. சிவகடாட்சக் குருக்கள் அவர்களும் நகுலகிரி ஆதீனகர்த்தா பிரம்மஸ்ரீ தி. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களும், நல்லை ஆதீனப் பரமாசாரிய சுவாமிகளும் தர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் சிறப்புரை வழங்கினர்.

30 8 80 சனிக்கிழமை இக்கோயிலிற் கொடியேற்றம் நிகழவிருக்கின்றது.

### நல்லை ஆதீனப் பஜனை நடையாத்திரை

செல்வச் சந்நிதி முருகனுக்கு பஜனை செய்யும் பணியை மிக விசேடமாக மேற்கொள்பவர்கள் நல்லை ஆதீனத்தார்களே.

ஆதீனப் பரமாசாரியார் தலைமையில் ஆண்டு தோறும் நிகழும் இந்தப் பத்திப் பணி இவ்வாண்டும் மிகு பயபத்தியுடன் நிகழ்ந்தது.

சந்நிதிக்கு சென்ற பல்லாயிரக் கணக்கான அடியார்கள் இந்த பஜனையைக் கேட்டு ஆனந்தம் அடைந்தார்கள்.

### நல்லை ஆதீனம்- ஞானபீடத்தமர்ந்த இருபத்திரண்டாம் நல்லாண்டு

ஆவணிக் கார்த்திகை — அரிய நினைவு நாள்

வரம்புயர ஊர் வளம் பெருகுதல் போன்று நல்லை ஆதீன ஆண்டு பெருக நாட்டின் ஆத்மீகமும் வளர்கின்ற உண்மையை உண்மைச் சமயிகள் யாவரும் உற்றுநோக்கிய வண்ணம் இருக்கின்றனர்,

முத்தமிழ் ... யாக முளைத்த இந்த ஆத்மீக வளப் பயிர் கற்றோருக்குக் களி பேர் உவகையாகவும் மற்றையோருக்குக் கற்பிக்கும் கழகமாகவும் சைவ சமயத்துக்குச் சால்புடைய குத்துவிளக்காகவும் ஒளி பரப்பி வருவது திருவருளின் பெருக்கமே.

முத்தமிழ் வித்தகராய், சுத்த சைவ அந்தணோத்த

வளர்ச்சி 2 ம் பக்கம்

### தேவாரத்திலே திருச்செந்தூர்

அப்பர் அடிகள் திருமறைக்காட்டில் ஈசனுக்குத் திருத்தாண்டகம் பாடியபொழுது செந்தில்மேய வள்ளி மணாளற்குத் தாதை என்று சிவபெருமானை அழைத்தமை காண்க.

திருச்சிற்றம்பலம்

கள்ளி முதுகாட்டி லாடி கண்டாய்
காலனையுங் காலாற் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசே ராடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடி மேற்சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நஞ்செந்தில் மேய
வள்ளி மணாளர்க்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.

திருச்சிற்றம்பலம்

நக்கீரர் பாடிய நன் முருகாற்றுப் படையிலே இரண்டாம் படை வீடாகத் திருச்சீரலைவாய் திகழ்கின்றது.

"உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே அதாஅன்று"

நாமனூரலைவாய் என்னும் திருப்பதி யென்ற புலவர் அப் பதியோ நன்மை ஓங்கும். நல்லோர் புகழ்ந்த உயரும் சீரினையுடைய புகழ் பொலிந்ததென்று கவி நயம் கமழக் கருத்துரைக்கின்றார். இத்தகைய

(வளர்ச்சி 2ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

ரௌத்திரி ௵ ஆவணி ௴
29 - 8 - 80 வெள்ளி

## நல்லதோ நடவடிக்கை

இந்துசமய இந்து கலாசார அமைச்சு நிறுவப்பெற்ற நன்னாள் தொடக்கம் இதுவரை பல வேறு செயற் றிட்டங்களை அமைத்துச் செயற்பட்டு வருவதை நாம் பன்முறைகளிலே பாராட்டியிருக்கின்றோம்.

இந்த அமைச்சு சிந்தனை செய்து கருமங்களை ஆற்றுவது ஒரு பெரிய பாக்கியம். அமைச்சர், அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் அலுவலகத்தோர் யாவரும் ஒரே இலட்சியமாகக் கடமைக் கண்ணியத்தை வைத்துப் பணியாற்றி வருகின்றனர். தகுதி வாய்ந்தவர்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் வரவேற்று நடைமுறையை இயக்குகின்றார்கள்; இவ்வளவுப் நல்லமைச்சுக்குரிய எழிலார் பண்பாகும்,

இப்பொழுது இந்துமத நூல்களை மறு பிரசுரம் செய்ய ஏற்ற ஒழுங்குகளை எடுப்பதற்கு இந்த அமைச்சர் முற்பட்டிருக்கின்றார் இந்தச் சந்தர்ப்பத்தில் சைவ மக்களின் தகுதி வாய்ந்த முதிய பழைய தான் ஆகும் இந்துசாதனம ஒரு எண்ணத்தை அமைச்சர் அவர்களுக்குச் சமர்ப்பிக்க முன்வருகின்றது.

இந்துமதநூல்கள் என்றால் அவை பலதிறப்பட்டவை. அவற்றுள் இந்நாட்டு மக்களிற் பெரும்பாலார் கைக்கொள்ளும் சைவசித்தாந்தம் அதி சிரேட்டமானது,

பேரறிஞர் நாவலர்பெருமான் பிரசங்கவாயிலாகவும் நூல்கள் வழியாகவும் சைவ சித்தாந்த பிரசாரகராக விளங்கினர். அந்த நெறியைப் பின்பற்றியே யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையும் இந்துசாதனமும் பல்லாண்டுகளாகப் பணி செய்து வளர்ந்த வண்ணம் இருக்கின்றன.

நாவலர் பதிப்பு நூல்கள் என்றால் அவை சுத்தத்துக்கும் வழுவின்மைக்கும் பொருட் பொருத்தத்துக்கும் எடுத்துக் காட்டாக அனைத்துலகும் கைக்கொள்ளப்படுவன. அதேவழியிலேயே சைவ பரிபாலன சபையாரின் வெளியீடுகளும் உள என்று சொன்ஞல் அது உண்மைக்கூற்றாகும்,

இக் காலத்திற் கேற்றவாறு மாணாக்கர்களுக்குப் பயன்படும்வண்ணம் சைவ சித்தாந்த நூல்கள் எவை நாவலர் அவர்களாற் பதிப்பிக்கப்பெற்றனவோ இச் சபையாரால் தொடர்ந்து வெளியிடப் பட்டனவோ அவற்றை இந்துசமயகலாசார அமைச்சு மறுபிரசுரம் செய்தல் மிக நன்று தொகுப்பு நூல்களாக மறுபிரசுரம் இருக்கவொண்ணாது. சைவ சித்தாந்தநெறி மாணவர்களுக்குப் பயன்படத் திருமுறைத் தொகுப்புகளை வெளியிடுதல் நன்று.

இந்த நன் முயற்சிக்கு இன்னும் ஓர் ஒழுங்கினை வாம் உத்தேசிக்கின்றோம் மறு பிரசுரத்துக்கான ஆலோசனைச் சபைகள் நிறுவப்பட வேண்டும் சைவ சித்தாந்தத்துக்கென ஒரு தனி ஆலோசனைச் சபை உண்டாக்கப்படல் வேண்டும். சைவ சமயப் பேரறிஞர்களும் பழம் பெருஞ் சபைகளும் இந்தச் சபையில் இடம்பெறல் வேண்டும்.

இந்த அமைச்சின் சொந்த முயற்சிச் சிந்தனையை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம். அமைச்சும் எங்கள் நல்லெண்ணத்தை நயந்துதவி செய்வார்களாக.

## அலைவாயில் ஆறுமுகன்

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

கைக் கொண்டான் - இயமன் பயங்கரமான வீரம்பொருந்திய வாட்படையைத் தன் கையிற் கொண்டான், இந்திரன் ஏருலாவிய சாமரம் எடுத்தான் - இந்திரன் அழகு பொருந்திய சவரியை எடுத்தான் எ-று.

ஆத வத்தனிக் கடவுளு மமுதவான் சுடரச்
சீத வெண்மதிக் கடவுளுங் குடையுடன் செல்ல
நாத மிக்கெழு தந்திரி நலங்கொடு நடவி
மாத வத்துயர் தும்புரு நாரதர் வணங்க.

தாலு வேழுடைக் கடவுட வர்த்திலை தாங்கிப்
பாலின் வந்திட நிருதியுங் குபேரனும் பரவி
யால வட்டமும் விசிறியுங் கைக்கொள வளராக்
கோல நாண்மலர் மாரிதூவக் கடவுளர் குழும.

ஆயி ரக்கம லாசனத் திறையவ னன்னத்
தூய புட்கொடு புறஞ்செலச் சுடர்மணிக் கிரணப்
பாவொ ளிப்பணிப் பாயலான் படர்நுஞ் சிறைய
நாய கத்தனிக் கருடன்மீ தேறின னடப்ப.

சுரர்க ளார்த்தனர் முனிவர்க ளார்த்தனர் தொழுதே
நரர்க ளார்த்தன ரார்த்தன மறையொரு நான்குந்
தரையின் மெடசீ ரறஞ்சிறந் தார்த்தன தரங்கப்
பரவை யார்த்தென வார்த்தன பாரிடப் படையே.

துடிமு ழங்கின பேரிகை முழங்கின சேரிகா
ரிடிமு ழங்கின போலவான் றுந்துபி யிரைத்த
படக மேங்கின பதலைகள் பம்பின பரம்புங்
கடன்மு ழங்கின போலொலி பரந்தன கனமே,

விண்ணவர் பெருமான் வந்தான் வேனெடும் படையான் வந்தான்
பண்ணவர் மகுடந் தேய்க்கும் பதாம்புயக் கடவுள் வந்தா
னண்ணலின் குமரன் வந்தா னாறுமா முகத்தன் வந்தான்
றண்ணற வொழுகு நீபத் தாமவேள் வந்தான் வந்தான்.

கழுமலத் துதித்தஞானக் கான்முளை வந்தான் வந்தான்
மழையெனக் கருணை யெம்பால் வழங்கிய செவ்வேள் வந்தான்
றழையுமுச் சங்கத் தேறுந் தலைமைப்பா வலவன் வந்தான்
செழுமறைப் பெருமான் வந்தா னென்றன சின்ன மெல்லாம்.

ஆறுமா முகத்துப் புத்தே ளண்ணெழு தேரி னீங்கிக்
கூறுநான் மறையு மொன்றுங் கோயிலிற் குமரன் யானைப்
பேறதாந் தெய்வ யானைப் பெண்ணொடு மடியர் வாழ்த்த
மாறிலாக் குமர மூர்த்தி மகிழ்ந்துவீற் றிருந்தான் மாதோ.

வீற்றிருந் தருளினோடும் வேதற்கும் விளங்குஞ் சோதி
யாற்றலந் திகிரி யாற்கு மமரர்க்கும் விடமுன் னீந்து
தேற்றுநான் மறைவல் லோராந் திரிசதந் திரத்தர் வாழ்த்திப்
போற்றவேற் கரத்துப் புத்தேள் புவனிகாத் தளிக்கு நாளில்

## தேவாரத்திலே திருச்செந்தூர்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

திருச் செந்திலுக்கு எழுந்தருளுதல் குன்றமர்ந்துறை தலுமுரிய குகனுக்கு நிலை பெற்ற குணமாம் என்றனர் நக்கீரர்.

சங்க நூல்கள் திருச்செந்திலோனை விளங்க வைக்கின்றன. அகநானூற்றில்: "திருமணி விளக்கின் அலைவாய்ச் செருமிகு சேய்" என்றும் புறநானூற்றில் "வெண்டலைப்புணரி அலைக்குஞ் செந்தில் நெடுவேள் நிலை இல் காமர் வியன்றுறை" என்றும் வருவன காண்க.

ஆறுமா முகத்தீசன் நீங்கா இடங்களைச் சிலப்பதிகாரம் "சீர்கெழு செங்கோடும் வெண் குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன்" எனக் குறிப்பிடுதல் நோக்கற்பாலது. ——

## விக்கிரக வணக்கம் விபரீதம்
## என்ற வீண் வாதத்துக்கு
## சுவாமி விவேகானந்தரின் ஆப்பு

(தம்பலகாமத்தில் இந்துசாதன நேயராக இருக்கும் திரு. க. வேலாயுதம் இக் கட்டுரையைக் கணபதி எழுதிய அறிவுக் கனல்" என்ற வெளியீட்டை ஆதாரங்காட்டி எழுதியிருக்கின்றனர்)

சுவாமி விவேகானந்தர் பாரத சமஸ்தானங்களில் ஒன்றான—ஆல்வர் சமஸ்தானத்துக்கு விஜயம் செய்தார்-சமஸ்தான திவான் தளபதி இராமச்சந்திரர் சுவாமி அவர்களைத் தமது இல்லத்தில் வரவேற்று உபசரித்தார். சுவாமியைக் காண மகாராஜா மங்கள சிங் திவான் வீட்டுக்கு வந்து சுவாமியை முறைப்படி வணங்கினார். சுவாமிஜீ அவர்களுடன் மன்னர் உரையாடிக் கொண்டிருந்தபோது மன்னன் சுவாமிகளை நோக்கி "பாபாஜி, எனக்கு விக்கிரக வணக்கத்தில் நம்பிக்கை கிடையாது என் விதி என்னவது" என்று கேட்டார். அப்படிக் கேட்கும் போது மன்னரின் குரலிற் கேலி தொனித்தது. சுவாமி விவேகானந்தருக்கு மன்னரின் பரிகாச வார்த்தை வியப்பாக இருந்தது. "நீங்கள் தமாசாகக் கேட்கவில்லையே" என்று சுவாமிகள் மன்னரிடம் வினவினார். "இல்லவே இல்லை உண்மையைத்தான் சொல்கிறேன், மற்றவர்களைப் போற் கல்லையும் மண்ணையும் என்னுற் கடவுள் என்று தொழ முடியவில்லை' இனிமேல் இந்த உலக வாழ்க்கை முடிந்த பிறகு நான் அவதி உறுவேனு" என்று கேட்டார் அமரர்.

சுவாமிஜீ மன்னருக்குப் பதில் அளிக்காமல் அங்குமிங்கும் பார்த்தார். சுவரில் மாட்டி இருந்த மன்னரின் படத்தின் மேல் அவர் பார்வை விழுந்தது. திவானிடம் அதை எடுத்துக் காட்டினார். திவான் படத்தைக் எடுத்துச் சுவாமிகளிடம் கொடுத்தார். இவ்வளவில் இக் கதையைச் சுருக்கிச் சொல்லின்:- அப் படத்தை அவமானப்படுத்தும் வகையில் எச்சிலால் அசுத்தம் செய்யும்படி சுவாமிகள் மன்னனையும் திவானையும் ஏனையோரையும் பன்முறை பலவந்தப்படுத்தினர். அவர்கள் பிரமித்து நிற்கவே சுவாமிகள் மீண்டும் சொன்னதாவது இப் படம் வெறுங் கடதாசிதானே ஏன் அதை அசுத்தப்படுத்தினுல் என்ன வந்துவிட்டதென்றார் சுவாமிகள்,

திவான் மிகுந்த சிரமத்துடன் "நீங்கள் என்ன சொல்கிறீர்கள் இது எங்கள் அருமை மன்னரின் படமல்லவா இதன் மீது நாங்கள் எச்சிற்படுத்தமுடியுமா" என்று கேட்டார். உடனே சுவாமிகள் மன்னர் பக்கம் திரும்பி "உயர் மிகு அரசே பாருங்கள் இந்தப் படம் உயிரோடு உலாவும் நீங்களா! இல்லை. வெறும் கடதாசியிலும் கண்ணாடியாலும் ஆனது. அப்படி இருந்த போதிலும் தங்களின் உருவத்தைப் போன்ற சாயல் இப்படத்தில் பதிந்துள்ளது என்ற ஒரே காரணத்துக்காக இப் படத்தை அவமதிக்க மக்கள் மறுப்பதுடன் வணங்கி மரியாதையே செலுத்துகின்றனர். இது போன்றதே விக்கிரக வணக்கமும் மக்கள் கல்லையோ பிரதிமையாக வணங்குவதில்லை அந்தப் பிரதிமை மூலமாகப் பகவானையே வணங்குகிறார்கள். ஏ கல்லே நான் உன்னை வணங்குகிறேன். எனக்குக் கருணை காட்டு என்று யாரும் வணங்குவதில்லை இறைவனுக்குத்தான் அக்கல் மூலம் வணக்கம் செலுத்துகிறார்கள்' என்று விக்கிரக வணக்கத்திற்கு சுவாமிஜி விளக்கம் அளித்தார். பிரமசமாஜத் தொண்டராக இருந்து உருவமற்ற இறைவனுக்கு உருவம் வைத்து வணங்குவதைத் தம் குருநாதரிடமே வாதித்த சுவாமிகள் தங்கள் கேள்விக்குச் சாதகமாகவே பதில் தருவார் என எதிர்பார்த்த ஆல்வார் மன்னரும் பிரதானிகளும் சுவாமியின் பதிலைக் கேட்டு ஏமாற்றமும் கவலையும் அடைந்தார்கள்.

சுவாமிஜீயின் விளக்கத்தைக் கேட்டு மன்னர் பங்களிப்பின் நெக்குருகி விட்டார். தன் இரு கரங்களையும் கூப்பிக் கொண்டு 'சுவாமி இன்று என் கண்களைத் திறந்து விட்டீர்கள் இப்போது சொல்லுங்கள் இவ்வளவு காலமும் விக்கிரக ஆராதனையைப் அவமதித்த என் கதி என்னுவது" என்று கேட்டார். இம் முறை மன்னரின் பேச்சில் பரிகாசம் காணப்படவில்லை. பரிதாபம் தொனித்தது. மன்னரைக் கனிவுடன் நோக்கிய சுவாமிஜீ ',மகாராஜ் கடவுள் கருணா சமுத்திரம் அவரொருவனுமே தான் மன்னிக்கவும் அருள் புரியவும் முடியும் அவனை மனமுருகப் பிரார்த்தனை செய்யுங்கள் என்றார்,

## இலக்கணம் இன்றேல் இலக்கியம் எதற்கு?

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம் — எழுத்தறியார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கட்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

— "நன்னெறி"

## நல்லை ஆதீனம்

(1ம் பக்கத்து வளர்ச்சி)

மராய், கலைக் கொத்தாய் விளங்கும் நல்லை ஆதீனப் பரமாசாரிய சுவாமிகளின் பன்முகப்படுத்தப் பெற்ற சிவப்பணி இந்நாட்டின் தவப் பயனேயாகும்.

சமயக் கதைகளைக் கலை நுட்பத்துடன் இன்னிசை அமைய உள்ளத்தை ஊன்றித் தொட்டுணர்ச்சி எழுப்பும் பான்மையில் பரமாசாரியசுவாமிகள் ஆற்றுந்தொண்டு அளப்பரியது.திருமுறைப்பயிற்சிபன்னிக் கூடமட்டத்திலிருந்து பல்கலைக்கழகம் வரை எல்லோருக்கும் நல்ல முறையிலே அமைய இந்த ஆதீனம் செய்யும பணி எழில் மிக்கது.

சித்தாந்த வகுப்புகள் மூலம் சைவசாத்திரங்களைச் சால்புடைய வித்தகர்களின் பேருதவியுடன் பயிற்றுவிக்கும் ஆதீனப் பணி யாதினும் மேலானது.

ஓங்குக உண்மைத் தொண்டு, — —

# சிவலிங்க வழிபாடு உலகெங்குஞ் சிறந்தது.

## சைவசித்தாந்தமகாசமாச மாநாட்டுத் தலைமையுரை

(திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் எம். ஏ.)

முன் வளர்ச்சி - 2

மேலும் அவர் இந்தச் சிவலிங்க வழிபாடு மக்கள் பண்பாட்டின் உயர்வினைக் காட்டுகின்றது எனவும் பாராட்டியுள்ளார்.7 இந்தியாவின் கிழக்கிலுள்ள நாடுகளான சுமத்திரா, பிலிப்பைன்சு, சாவகம், சீயம் முதலிய நாடுகளிலும் இலிங்கங்கள் உள்ளன என்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர் குறிப்பிட்டுள்ளார். எனவே உலகம் முழுவதும் சிவ வழிபாடு விளங்கியது என்பதனை உணர்கின்றோம். எனவே,

" தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி " 8

என்ற மணிவாசகரின் திருவாக்கு உலகம் முழுவதும் சிவலிங்க வழிபாடு இடம்பெற்றது என்ற உண்மையினைப் புலப்படுத்துவதாகும்.

இனி சைவ சமயத்தின் தொன்மையை விளக்கும் இலக்கியச் சான்றுகளைக் காண்போம் மிகப் பழமை இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் பாடண்டிணையில் கடவுள் வாழ்த்துப் பற்றிக் கூறும்போது ஆசிரியர் தொல்காப்பியனார்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"9

எனக் கூறியுள்ளார். கொடிநிலை என்பதற்குப் பொருள் கூற வந்த உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர் 'கொடிநிலை - ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள்" எனக் கூறியுள்ளார் இக் கந்தழி என்பது சிவபெருமானைக் குறிக்கும் என்பர். மேலும்.

" சேயோன் மேய மைவரை உலகமும் "10

என்ற தொல்காப்பிய நூற்பாவானது மலையும் மலைசார்ந்த இடமுமாய குறிஞ்சி நிலத்தின கடவுள் முருகன் என்பதைக் குறிப்பிடுகின்றது. சங்க நூலில் ஒன்றாகிய பத்துப்பாட்டில் மதுரைக் காஞ்சியில் முழுமுதற் கடவுளாகிய மழுவேந்திய சிவபெருமான் உலகத் தோற்றத்திற்கு முதற் காரணமாக ஐம்பெரும் பூதங்களை உண்டாக்கி, அவற்றுடன் தானும் கலந்துள்ளார் என்ற கருத்தினை மாங்குடி மருதனார் கீழ்க் காணும் வரிகளில் கூறியுள்ளார்.

" நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்பொடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக."

என்பதாம். (வளரும்)

---

## நவமாக அமைந்த நவசக்தி அர்ச்சனை

### துர்க்காதேவி தேருலாவின் பின் துலங்கிய நடனபவனி

சித்திரத்தேரில் அமர்ந்து எத்தனையோ ஆயிரம் அடியார்கள் புடைசூழ மங்கல இரத பவனியில் எழுந்தருளிய துர்க்காதேவி மீண்டும் தேர்முட்டியை அடைந்ததும் நிகழ்ந்த நவசக்தி அர்ச்சனையின்போது அருள் ஒளி பாலித்த வண்ணமாய்க் காட்சிகொடுத்தமையைக் கண்டோர் புண்ணியப் பேறுடையவர்கள்.

எல்லாம் பச்சை நிறமாக இருந்த சூழலில் ஒன்பது அந்தணக் குருக்கள் கூட்டம் தேவமாதிரமோதி ஒலிக்க அர்ச்சனை நிகழ்ச்சி அபூர்வமாயிருந்தது. மெய்மறந்து நின்ற அடியார்கள் தேவியின் திருவருட்பொலிவில் ஆனந்த அநுபவமுற்றனர்.

---

## ஆவணியிற் குருபூசை நாட்கள்

குங்கிலியக் கலயர் — ஆவணி 5 ம் நாள்
செருத் துணையர் — 11 ம் நாள்
புகழ்த்துணையர் — அதிபத்தர் - 12 ம் நாள்
இளையான் குடி மாறர். 13 ம் நாள்
மறைஞானசம்பந்தர் — 15 ம் நாள்
குலச் சிறையார் — 30 ம் நாள்

கமழ்ந்த குங்கிலியத் தூபத் தொண்டில் அமைந்த அடியார் குங்கிலியக்கலயர்

இக் குங்கிலியம் பலவகையாகக் காணப்படும். கருங்குங்கிலியம், வெண்குங்கிலியம், செங்குங்கிலியம், பச்சைக்குங்கிலியம் என்றபடி.

காலனார் உயிர் செற்றார்க்குக் கமழ்ந்த குங்கிலியத் தூபமிட்டுக்காலங்கடந்தா னுடன் அமரும் பதிபெற்ற நாயனார் குருபூசை 21 - 8 - 1980 நிகழ்ந்தது.

---

## நிருபர் பயிற்சிக் கருத்தரங்கு நிகழ்ச்சி

தேசிய பத்திரிகையாளர் கிறிஸ்தவ நிறுவனம் நடாத்திய கத்தோலிக்க நிருபர்களுக்கான மூன்று நாள் பயிற்சிக் கருத்தரங்கின் நிறைவுதின சான்றிதழ் வழங்கல் வைபவம் 25-8-80 திங்கட்கிழமை பி. ப. 3-30 மணிக்கு திருமறைப்பணி நிலைய (ஆயர் இல்லம்) த்தில் இடம்பெற்றது இவ்வைபவத்திலே இந்த நிறுவனமும் பாதுகாவலன் ஆசிரியரும் விடுத்த அழைப்பின் பேரில் அநேகர் கலந்து சிறப்பித்தனர்.

## தமிழ் அறிஞர் மறைவு

பாரதநாட்டுத் தமிழ் அறிஞர்களிலே பேராசிரியர் வரிசையிலே பிரசித்தபெற்ற திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் இவ்வுலகவாழ்வை நீத்தமை தமிழ் உலகிற்கோர் பெருநட்டம்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலே முன்பு துணைத்தலைவராக நன்மதிப்புடன் கடமையாற்றிய பேராசிரியர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை பல நூல்களை இயற்றி இலக்கிய மலர்ச்சிக்கு உதவி புரிந்த அறிஞர்.

---

# THE SACRED HYMN WHICH SWAM UPSTREAM

By Sri A. Visvanathan

(Reproduced for the benefit of Hindus who do not speak Tamil)

(continued from our last issue)

We shall now proceed to the study of the second hymn which reads as followws;-

அரிய காட்சியராய்த், தமது அங்கை சேர்
எரியர், ஏறு உகந்தேறுவர், கண்டமும்
கரியர், காடுறை வாழ்க்கையர்: ஆயினும்
பெரியர்: ஆரறிவார் அவர் பெற்றியே!

Difficult to realize He is, there's fire in the palm of His hand. He rides the bull, He is blue-throated, He haunts the cremation ground Yet great indeed He is, who is there that can fathom His greatness?

St. Seklar comments on thes hymn in three verses as follows;

அரிய காட்சியர் என்பது அவ்வாதியைக்
தெரியலா நிலையாற் றெரியாதென
உரிய அன்பினிற் காண்பவர்க்கு உண்மையாம்
பெரிய நல்லடை யாளங்கள் பேசினார்.

The beginningless God is said to be difficult to realize as He cannot be known by any one in the ignorant (bounden) state To devotees who see Him with the eyes of love (knowledge), he (the hymnist) gave some (hints as to His) excellent features.

ஆயினும் பெரியார் அவர் என்பது
மேய இவ்வியல்பே யன்றி விண்முதற்
பாய பூதங்கள் பல்லுயிர் அண்டங்கள்
ஏயும் யாவும் இவர் வடிவு என்றதாம்.

Yet great indeed He is said to be, as He transcends all these and is of Universal form including heaven (and earth) and the other pervading elements (fire, water and air) the countless souls and spheres (sun, moon, &c.

To be continued

---

## Tirumantiram

(continued from page 4)

tations to ever deeper strata. From time to time these ashram communities would send out members in response to the needs of the world, pilgrims who would travel by foot, taking the Eternal Truths to be taught and reestablished where perhaps superstition or alien religions had gained a foothold. These rishis travelled throughout the known world in those early days, spreading the Sanatana Dharma Saivism far and wide. It was a one teaching, but people adapted it to their own understanding and culture and local conditions, and thus the various religions of the world arose. Saint Tirumular was such a Himalayan rishi, a siddhar sent on mission to South India to spread the purest teachings of Saivism to the people there. Hinduism is a missionary religion. Everyone within it, myself included, is on a mission or is purifying himself through sadhana enough so that he can be given a mission for the religion from some great soul or a God perhaps This is the pattern within Saivism, and Saint Tirumular's mission was to summarize and thereby renew and reaffirm at one point in time the final conclusions of the Sanatana Dharma, the purest Saivite path, Saiva Siddhanta.

---

வயோதிப வனிதையர்

## வாழக்கூடாதா

'மிலேச்சர்' என்றபதம், இறை நம்பிக்கை இல்லாதவர், எனவே மனிதப் பண்பற்றவர், ஆகவே வன விலங்குகளினும் கொடியர் என்ற கருத்துடையது.

இப்பொழுது நாடெங்கும் இந்த 'மிலேச்சர்' இனம் ஒன்று நடமாடிக் கொண்டு பொக்கை வாய்க் கிழவிகளின் பொன் ஆபரணங்களைக் கவரப் பொல்லாத பழியாகும் படுகொலையிலே கிரமமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தக் கொலை பாதகர்களைக் கண்டுபிடிக்கமுடியாது பாடிகாவலர் அலைப்படுகின்றார்கள்.

சான்று பகரக்கூடியவர்களும் மனச் சான்றுக்கு மாறாக மௌனம் சாதிக்கின்றனர்.

'நீதி' என்பது சைவத்தின் ஆதி அறம்.

கண்ணொளி வெண்குடை வேந்தன் மைந்தனுக்கு அப் பாலன் தற்செயலாகச் செய்த ஒரு கொலைக் குற்றத்துக்காகச் சிரச்சேதத் தண்டனை விதித்த வரலாற்றைச் சற்று இக்கட்டு மக்கள் திரும்ப ஆராய்ந்து பார்த்தால் உண்மையறிந்தும் அதை மறைக்க ஒருவரும் சமயமென்ற வகையில் ஒருப்படார்.

---

## ஆண்டு விழா

தென்மராட்சி பக்தி நெறிக்கழக 10 வது ஆண்டு விழா சங்கீதபூஷணம், பண்டிதர் ஆ. கி. ஏரம்பமூர்த்தி தலைமையில் சங்கத்தானை கந்தசாமி கோவிலில் இடம்பெற்றது.

செயலாளர் சைவப் புலவர் பண்டிதர் கு. வி. மகாலிங்கம் ஸ்ரீ காசிமடம் சார்பில் சைவப் பணி பயிற்சி அளித்தமை பற்றி பாராட்டப்பட்டது. சிவ ஸ்ரீ கு. ஜெகதீஸ்வர குரு தலைமையில் கருத்தரங்கும் நடந்தது. பல வெளியூர் சைவப்பெரியார்களும் கருத்துரை செய்தனர்,

—O—

Hindu Organ

Friday, 29-8-80

## MAKING THE MASSES MORE HEALTHY

It has been universally acknowledged that the development of a country can be assured only if the sanitary conditions of the areas of habitation are continuously improved.

The conditions that affect the health of a person are many. No attempt to obviate influences that are deleterious to health can succeed except with the concerted efforts of the medical men, the people and the Government.

Dirt and infection must be detected and removed at the earliest opportunity. This cleansing campaign cannot be accomplished without the fullest co-operation of the people. To make oneself clean, all living conditions must be unsoiled.

Religion demands a high degree of cleanliness in everything. Clean thoughts draw their inspiration from tidiness of the entire surroundings. Ablution is one of the many requirements for religious practice. Hence, it is absolutely necessary that top priority should be given to the maintenance of the proper health of the people.

Places of worship draw very large crowds of devotees. Such occasions create problems of transport, food and health. The sanitation of the area in which Temples are situated must be the special concern of the Authorities. The most careful attention must be paid to prevent pollution of water in tanks, canals and rivers. To assist the Authorities, volunteer associations should undertake the responsibility of keeping the premises clean.

In this connection we also wish to refer to the health of the large number of people who live in the Northern city of Yalpanam and of the equally large number of persons who have to go to the city for their official work, commercial purposes and for other undertakings. The Municipality is doing its utmost to maintain a high level of cleanliness, but the drainage system requires more and better attention.

### Some Ancient
## HINDU TEMPLES
### in Sri Lanka

As a matter of religious duty, the undersigned seeks to echo feebly the sentiments expressed in the praise-worthy Review in the Hindu Organ of a monumental book, small in size, but full of concentrated pious information written by Mr. Sanmugam Arumugam, scion of a devout Saivite group of families of Nallur famed for its sacred temples and inhabitants imbued with devotion. The precious book contains references to over fifty four (54) Shrines embodied in eighty three (83) pages and is full of substance. Every sentence contains more than a single fact, and there are fifty one (51) illustrations or pictures. My figures may not be exact as I am weak in numbering. It is an inspired and inspiring production. The book would prove a very helpful guide to devotees who wish to have information regarding shrines in Sri Lanka and could serve worshippers quite well. Hindus are found in several parts of the world including India, Burma, Pakistan, Malaysia, Siam, Bangladesh, Java, U. S. A. Canada, the Arab and the African countries, the United Kingdom, Germany, France, Russia, the list being not exhaustive. To them all as well as to those in Sri Lanka, the book constitutes a veritable treasure. The pious author is the son of pious parents, his father being the late Mr. Sanmugam connected with the Jaffna Saiva Paripalana Sabhai and reputed for his services to our holy religion. The Author who retired as senior deputy Director of Irrigation and rendered yeoman services to the restoration work of the Thirukerheeswaram Temple, being a Founder Member of the present Society. Not only did he render valuable services but he also caused many others to render such services. Having had the privilege of knowing him personally for years I would say that he would not like to be given credit personally for this remarkable volume but would lay everything humbly at the feet of the Almighty, the Creator of the Universe, and would like others also including the readers of this book to render similar obeisance.

Individuals, Societies, Libraries, educational and cultural institutions wherever Hindus are found would greatly benefit by perusing and owning this book. The Ministry of Hindu Affairs as well as the Ministry for Cultural Affairs would be rendering distinct services by extending their support in all possible manner to this meritorious book. It would also be of special advantage to the student population. Members of the general non-Hindu public interested in the religious, social and cultural life of Sri Lanka would find the volume informative and interesting.

It has been said that in ancient Sri Lanka there have been about One Thousand and Seventy Two (1072) temples dedicated to Lord Siva long before the advent of Prince Vijaya; it is also believed that a good portion of the territory has been submerged or lost owing to the upheavals of Nature and hence innumerable temples of the past are no longer in existence.

The wish expressed in the Review that the pious and talented author would do well to prepare further Volumes comprising of other important Hindu Temples now in existence would be shared by the public; no doubt, such task would however prove very arduous even for a devotee like the Author full of zeal but not quite young in years if it could be said so with all deference.

## Woking Together for General Welfare

*(By Sri S. Sivasubramaniam)*

(continued from our last issue)

For one thing, the language of strident denunciation and intense confrontation employed on occasions by holy personalities during earlier times are best avoided under present circumstances and the modern world set up in this Kali Yuga. My observation is for general application. The humble submission is also made that it would be less difficult for the Hindu Community in Sri Lanka than in many other parts of the world to follow the tenets of their holy Religion, which has no beginning and no end through the medium of Pleasant and Peaceful Co-operation advocated in the Editorial of the Hindu Organ.

# TIRUMANTIRAM: Fountainhead of Saiva Siddhanta

*(Continued from our last issue)*

minus a few important keys that the preceptor or Sat Guru has to fill in for the disciple who has proven himself worthy. It is something like a great chef who might write down all his finest recipes but leave out one or two crucial ingredients to preserve his reputation. Thus many of the mantras or yantras spoken of in this or other texts are correct as far as they go, but usually leave out a necessary key which makes them work. That does not mean they are useless. It does mean, however that the fullest use cannot be realized by merely reading or studying from the books.

There is a timeless quality about Saivam— which preceded Hinduism as we know it today — that sets it apart from the modern faiths on the planet such as Christianity and Islam. Of course we know that the founders of Buddhism, Jainism, and Sikhism were all good Hindus. Saivism is so very ancient that it appears among the first civilizations unearthed by archaeologist. It is our belief that Saivism is as old as man himself the original or seed religion from which all others have sprung forth; and since they are the offspring of Saivism we look upon them as parents look upon their children, with a deep love and a hope that they will do well and a look askance when they didn't. There never was a time when Saivism, the Sanatana Dharma, did not exist on the planet. Other religions trace their lineage to a man, to a founder, to a messiah or theologian Saivism does not. It has no founder because it was not founded by man. It is coexistent with man. That makes Saivism unique, different from all the religions and sects that followed it. Look into history and you will see it is the only religion without a beginning, without a founder and a date it was founded. Now one of the oldest of the preserved theologies of Saivism available to us today is that of Saint Tirumular. Of course, his was not the first theology, just one of the oldest to be preserved. He did not start anything new. His work is only a few hundred years older than the New testament. He codified Saivism as he new it. He recorded its tenets in concise and precise verse form, drawing upon his own realizations of the truths it contained. His work is not an intellectual construction, and it is not strictly a devotional canon either. It is based in yoga. It exalts and explains yoga as the kingly science leading man to knowledge of himself. Yet it contains theological doctrine and devotional hymns. It is the full expression of man's search, encompassing the soul, the intellect and the emotions.

Saint Tirumular's story begins more than two thousand years ago in the Himalayas where the great rishis had gathered in conclave apart from the rest of the world holding fast to the Sanatana Dharma as they pursued their own medi-

(continued in page 3)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna ( Telephone: 356 ) on Friday, 29-8-1980*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam

13 OCT 1980